## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை – விருதுநகர் மாவட்டம்

## திருச்சுழி வட்டம்

**அறிவிக்கை எண்: 01/2025** **நாள் : 21. 07– .2025.**

**விளம்பர எண். 01–TCL**

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டத்தில் காலியாக உள்ள ஒன்று (1) கிராம உதவியாளர் பதவிக்கான காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கு 21.07.2025 முதல் 19.08.2025– பிற்பகல் 05.45 வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| பதவியின் பெயர் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | சம்பள ஏற்றமுறை |
|---|---|---|
| கிராம உதவியாளர் | 1 | ரூ.11,100–35,100/– (சிறப்பு காலமுறை ஊதியம் ஊதியகட்டு எண்.6) |

**1–.காலிப்பணியிடங்கள் : 1**

| பிரிவு | பாலினம் | முன்னுரிமை / முன்னுரிமை | வயது (அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளன்று) | காலியிடம் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர் | பெண் | முன்னுரிமை அல்லாதது | குறைந்தபட்ச வயது–21 உச்சவரம்பு வயது–35 | 1 (ஒன்று) |

- அரசாணை (நிலை) எண் 122, மனித வள மேலாண்மைத் (கே.2) துறை, நாள்:02.11.2021–ன்படி முன்னுரிமை முறை பின்பற்றப்படுகிறது.

கிராமம் வாரியாக காலிப்பணியிட விவரம் :

| வ.எண் | கிராமத்தின் பெயர் |
|---|---|
| 1. | சுந்தரத்தான் |

2.முக்கிய தேதிகள் :

| | | | |
|---|---|---|---|
| அ. | அறிவிக்கை நாள் | : | 21.07.2025- திங்கட்கிழமை |
| ஆ. | விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | : | 19.08.2025- செவ்வாய் கிழமை |
| இ. | விண்ணப்பங்கள் பரிசீலனை செய்து முடிவு செய்யப்படும் நாள் | : | 29.08.2025- வெள்ளிக்கிழமை |
| ஈ. | வாசித்தல் மற்றும் எழுத்துத்திறன் தேர்வு நடைபெறும் நாள் | : | 19.09.2025- வெள்ளிக்கிழமை |
| உ. | நேர்காணல் நடைபெறும் நாள் | : | 03.10.2025- வெள்ளிக்கிழமை |
| ஊ. | தெரிவு செய்யப்பட்ட நபர்களின் பட்டியல் வெளியிடப்பட்டு, பணி நியமன ஆணை வழங்கும் நாள் | : | 17.10.2025- வெள்ளிக்கிழமை |

3.தகுதிகள் :

(அ) வயது (01.-07-2025 அன்று) :-

| வ. எண் | விண்ணப்பதாரர்களின் இன வகைகள் | குறைந்தபட்ச வயது (முடிவடைந்து இருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது (முடிவடைந்து இருக்கக் கூடாது) |
|---|---|---|---|
| 1. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், (பெண்) | 21 வயது | 35 வயது |

குறிப்பு: அரசாணை (நிலை) எண். 91 மனிதவள மேலாண்மை (S) துறை, நாள்: 13.09.2021 ன்படி பணி நியமனம் செய்யப்படுவதற்கான வயது உச்சவரம்பு அனைத்துப் பிரிவினருக்கும் அட்டவணையில் கண்டுள்ள வயது வரம்பிலிருந்து இரண்டாண்டுகள் உயர்த்தப்பட்டுள்ளது.

வயது வரம்புச் சலுகை :

(i) முன்னாள் இராணுவத்தினர் :

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிரிவினைச் சேர்ந்தவர்கள் 53 வயது நிறைவடையாமல் இருக்க வேண்டும்.

(ii) மாற்றுத்திறனாளிகள் :

நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் 10 ஆண்டுகள் வரை வயது வரம்புச் சலுகை பெற தகுதியுடையவராவார்கள்.

(ஆ) கல்வித்தகுதி (01.07.2025 அன்று உள்ளபடி)

01.07.2025-ம் அன்று விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்ச கல்வித்தகுதியாக 10-ஆம் வகுப்பு இறுதி தேர்வு எழுதியிருக்க வேண்டும்.

(இ) உடற்தகுதி

விண்ணப்பதாரர்கள் நேர்காணல் நாளன்று உடற்தகுதி சான்றிதழினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் அடிப்படை விதிகளுள் விதி-10-ன்படி சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) இருப்பிடத் தகுதி :

விண்ணப்பதாரர்கள் திருச்சுழி வட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்க வேண்டும். நிரந்தர முகவரிக்கு ஆதாரமாக வாக்காளர் அடையாள அட்டை/ஆதார் அட்டை/குடும்ப அட்டை/ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும். மனுதாரரின் நிரந்தர முகவரி தொடர்பாக எழும் தெளிவின்மைகள் குறித்து பணி நியமன அலுவலரின் முடிவே இறுதியானது.

4. தெரிவு நடைமுறை

| வ. எண். | தேர்வு முறை | வழங்கப்படும் மதிப்பெண்கள் | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| 1. | **கல்வித்தகுதி**<br>தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC–Secondary School Leaving Certificate Examination) தமிழ்ஒருபாடமாகக்கொண்டுதேர்வுஎழுதப்பட்டிருக்கவேண்டும். (குறிப்பு–(SSLC–Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். | 10 | 10(*) |
| 2. | **மிதிவண்டி/இருசக்கரமோட்டார்வாகனம் ஓட்டும் திறன்**<br>அ) இருசக்கர மோட்டார் வாகன ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பின், (தேர்வு நடத்த தேவையில்லை).<br>(அல்லது)<br>ஆ)மிதிவண்டி அல்லது இருசக்கர மோட்டார் வாகன ஓட்டும் திறன் இருப்பின்(தேர்வு மூலம் கண்டறியப்பட வேண்டும்.)முழு மதிப்பெண் வழங்கப்பட வேண்டும். | 10 | 10(**) |
| 3. | **வாசித்தல் மற்றும் எழுதும் திறன்**<br>அ) வாசிக்கும் திறனுக்கான தேர்வு(தமிழ்)<br>ஆ) எழுதும் திறனுக்கான தேர்வு(தமிழ்)(நேர்காணல் காணும் குழுவின் முன் வாசித்திட மற்றும் எழுதிட வேண்டும்) | 30 | 30(***) |
| 4. | **வசிப்பிடம்(Native Resident)**<br>(தற்போதைய முகவரிச்சான்றுடன் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)<br>அ)சம்பந்தப்பட்ட கிராமத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.<br>ஆ)திருச்சுழி தாலுகா எல்லைக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்.(நாளது தேதியின்படியான தாலுகா அதிகார வரம்பிற்குட்பட்டு) | 35<br><br>30 | 35 |
| | | | 85 |

| | | | |
|---|---|---|---|
| 5. | **நேர்காணல் :**<br>பின்வரும் மூன்று அதிகாரிகளைக் கொண்ட குழுவினால் நேர்காணல் நடத்தப்படும்.<br>அ) வருவாய் கோட்டாட்சியர்<br>ஆ)வட்டாட்சியர்<br>இ)பிற தனி வட்டாட்சியர் viz, தனிவட்டாட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்)/ நிலஎடுப்பு (நெடுஞ்சாலை /சிப்காட்) /நிலவரித்திட்டம்.<br>(அ).விண்ணப்பதாரர்கள்நேர்காணலில்கலந்துகொள்வதற்கு முன்பாக அவர்களது தகுதி குறித்த சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட வேண்டும்.<br>(ஆ).நேர்காணலில் கலந்துகொள்ளும் விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வுக்குழுவில் உள்ள தலைவர் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்கள் , விண்ணப்பதாரரின் செயல்பாட்டிற்கு ஏற்ப தனித்தனியே மதிப்பெண்கள் வழங்கவேண்டும். அதன்படி வழங்கப்பட்ட மதிப்பெண்களின் சராசரி (Average) கணக்கிடப்பட்டு நேர்முகத்தேர்வில் பெற்ற மதிப்பெண்களாக எடுத்துக் கொள்ளவேண்டும்.<br>(இ).விண்ணப்பதாரர்களின் ஒட்டுமொத்த செயல்பாட்டிற்கேற்ப வழங்கப்படும் மதிபெண்கள் குறைந்தபட்சம் 6 மதிப்பெண்கள் முதல்அதிகபட்சம் 12 மதிப்பெண்கள்வரைவழங்கப்படவேண்டும். எக்காரணத்தை கொண்டும் எந்தவொரு விண்ணப்பதாரருக்கும், 12 மதிப்பெண்களுக்கு அதிகமாகவோ அல்லது 6 மதிப்பெண்களுக்கு குறைவாகவோ வழங்கக்கூடாது.<br>(ஈ)தகுதிபெற்ற அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும், விடுதலின்றி நேர்காணல் நடத்தவேண்டும். நேர்காணலில் கலந்துகொள்ளாத விண்ணப்பதாரர்களை தெரிவுசெய்யக்கூடாது.<br>(உ).ஒட்டுமொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் விண்ணப்பதாரர்களின் தரவரிசைப்பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். | 15 | 15 |

| | | | |
|---|---|---|---|
| | நேர்காணலில் தேர்வுபெற்றவர்களில் ஒன்றுக்கு மேற்பட்டோர் சமமான மதிப்பெண்களை பெற்று ஒரே தரவரிசையில் இடம்பெறும்நிலையில் சம்மந்தப்பட்ட கிராமத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். அவ்வாறு முன்னுரிமை அளித்தும் ஒரே தரவரிசையில் இடம்பெறும் நிலையில் வயது அடிப்படையில் மூத்த விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். | | |
| | மொத்தம் | | 100 |

<u>குறிப்பு :</u>

ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் ஒரு காலிப் பணியிடத்திற்கு சமமான மதிப்பெண்கள் பெற்றிருந்தால், வயது அடிப்படையில் மூத்த விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவார்.

<u>5. தடையின்மைச் சான்று</u>

அரசுப் பணியாளர்களாக உள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது துறையிலிருந்து தடையின்மைச் சான்று பெற்று சான்றிதழ் சரிபார்ப்பின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

<u>6.விண்ணப்பம் செய்தல் :</u>

கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை திருச்சுழி வட்டாட்சியர் அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ 21.07.2025– முதல் 19.08.2025 அன்று மாலை 5.45 மணி வரை விண்ணப்பம் செய்யலாம்.

19/7/2025

வருவாய் வட்டாட்சியர்,
திருச்சுழி.

19/7/25